Registered as a News paper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

| ஈழநாடு சந்தா விபரம் இந்தியா — இலங்கை | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 5 யாழ்ப்பாணம் சோபகிருது தை 9 ஆம் நாள் றம்ளான் 6 (22-1-64) புதன்கிழமை இதழ் 345

# இந்தியர் பிரச்னை - இந்தியா கைவிரிப்பு

## "இலங்கையின் பிரச்னை அதுவே தீர்க்கட்டும்"

கொழும்பு, செவ்வாய்

**இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினர் பிரச்னை சம்பந்தமாக இந்தியா எதுவும் செய்யக்கூடிய நிலையில் இல்லையென்று இலங்கை அரசாங்கத்துக்கு இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளதாக அறியப்படுகிறது. இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினர் பிரச்னை முழுக்க முழுக்க இலங்கையின் பொறுப்பென்றும் இந்தியாவுக்கும் அவர்களுக்கும் சம்பந்தமேயில்லையென்றும் இந்திய அரசாங்கம் தெரிவித்துள்ளதாகத் தெரியவருகிறது.**

இந்திய வம்சாவளியினரில் மூன்றிலொரு பிரிவினரை, அவர்கள் 55 வயது வரை இங்கு தொழிலில் இருக்க அனுமதிப்பதானால் அவர்களை இந்தியா ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதாக இந்தியா அறிவித்திருந்த தென்றும் ஆனால் இதற்கு இலங்கை அரசாங்கம் சம்மதிக்கவில்லையென்றும் அறியப்படுகிறது.

இதே சமயம் இந்திய வம்சாவளியினரில், இலங்கைப் பிரஜாவுரிமை கோரி, பிரஜாவுரிமை மறுக்கப்பட்ட அனைவரையும் இந்தியா தனது பிரஜைகளாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இலங்கை அரசாங்கம் வற்புறுத்தியதாகவும் தெரிகிறது.

இந்நிலையில் இந்திய வம்சாவளியினருக்கும் தங்களுக்கும் பொறுப்பு இல்லையென்று இந்தியா பதிலளித்துவிட்டதாம்.

## உத்தியோக மொழிஉதவி கமிஷனர் யாழ்ப்பாண விஜயம்

### அரசாங்க காரியாலயங்களுக்கு சென்று நிலைமையை ஆராய்ந்தார்

யாழ்ப்பாணம், புதன்

வடபகுதியில் உள்ள அரசாங்க காரியாலயங்களில் உத்தியோக மொழி எவ்விதம் அமுல் செய்யப்படுகிற தென்பதை அறிந்து கொள்வதற்காக உத்தியோக மொழி இலாகா உதவிக் கமிஷனர் யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்து அரசாங்க காரியாலயங்களுக்குச் சென்று பார்வையிட்டார். யாழ்ப்பாண அரசாங்க அதிபரையும் சந்தித்துப் பேசினர்.

ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றும் சிறு சேவையாளர் மீது சிங்களத்தைத் திணிக்க வேண்டாமென்றும், சாவாதிகார முறையில் சிறுசேவையாளர் மீது சிங்களத்தைத் திணிப்பதன் மூலம் அவர்களின் வருடாந்த உயர்ச்சிப்பணத்தை நிறுத்த வேண்டாமென்றும்' உத்தியோக மொழி உதவிக் கமிஷனரிடம் நேற்றுக்காலை அகில இலங்கை சுகாதார இலாகா தொழிலாளர் சங்க யாழ்ப்பாணக் கிளைத் தூது கோஷ்டி பலத்த கண்டனம் தெரிவித்துள்ளது.

சிங்கள மொழி அமுலினால், சங்க அங்கத்தவர்கள், குறிப்பாக சிறுசேவையாளர் எவ்விதம் பாதிக்கப்படுகிறார்கள் என்று தூதுக்குழுவில் பங்குபற்றிய சங்கத் தலைவர் திரு. பொ. தேவராசாவும், காரியதரிசி திரு. இ. அருமைநாயகமும், உத்தியோக மொழி உதவிக் கமிஷனரிடம் விளக்கிக் கூறினர்கள்.

புகையிரத வாரன்ட் சிங்கள மொழியில் வழங்கப்படுவதாகவும், நியமனப பத்திரங்களும், சிறுசேவையாளர்களுடன் நடைபெறும் கடிதத் தொடர்புகளும் சிங்களத்தில் மட்டும் இருப்பதாகவும் தெரிவித்து தூதுக்குழு ஒரு மகஜரை சமர்ப்பித்தது.

ஆங்கிலம் உத்தியோக மொழியாக இருந்த பொழுது நியமனப் பத்திரங்களும் கடிதத் தொடர்புகளும் சுயமொழியில் இருந்ததாக உதவிக் கமிஷனரிடம் சுட்டிக் காட்டப்பட்டது.

சிறு சேவையாளரும் எங்கள் சங்கமும் எழுதும் கடிதங்களுக்கும் அதே மொழியில் பதில் தரப்படுமென்று, காலஞ் சென்ற பிரதமர் பண்டார நாயக்கா தந்த வாக்குறுதி இன்று தகர்த்தெறியப்பட்டதன் மூலம் சிறுசேவையாளர் மத்தியில் சிங்களத்தைத் திணிக்க முற்படுவது காலஞ் சென்ற பிரதமர் பண்டார நாயக்காவின், கொள்கைக்கு மாறான தென்று உதவிக் கமிஷனரிடம் எடுத்துக் கூறப்பட்டது.

சங்கக் குழுவினரின் குறைபாடுகளை மேலிடத்திற்கு தெரிவித்து தகுந்த நடவடிக்கை எடுப்பதாக உதவிக் கமிஷனர் வாக்குறுதியளித்தார்.

உத்தியோக மொழி அமுல் சம்பந்தமாக ஆராயும்பொருட்டு நேற்று முன் தினம் வவுனியாவிலுள்ள அரசாங்க இலாகாகளுக்கு விஜயம் செய்த உத்தியோக மொழி உதவிக் கமிஷனர் நேற்று யாழ்ப்பாணத்திலுள்ள ஒவ்வொரு இலாகாகளுக்கும் சென்று நிலைமையை நேரடியாக ஆராய்ந்து வருகிறார்

நேற்றுக் காலை சௌக்கிய சேவை அத்தியட்சகர் காரியாலயத்திற்கு விஜயம் செய்த உதவி கமிஷனர், அதன்பின் கச்சேரிக்கு சென்று அங்குள்ள

(6-ம் பக்கம் பார்க்க)

## இந்திய மந்திரி சபையில் மாற்றம்

### காமராஜுடன் நேரு ஆலோசனை

புதுடில்லி, ஜன. 21

இந்தியமந்திரி சபையில் விரைவில் மாற்றம் ஏற்படுமென அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

காங்கிரஸ் அக்கிராசனர் இன்று காலை பிரதமர் நேருவை அவரது இல்லத்துக்குச் சென்று சந்தித்தார். சுமார் ஒருமணி நேரம்வரை அங்கு தங்கியிருந்து அவருடன் ஆலோசனை செய்தார்.

உள்நாட்டுமந்திரி திரு. குல்சாரிலால்நந்தா நேற்று பிரதமரைச் சந்தித்தார்.

மந்திரிசபை மாறுதல்பற்றி இவ்வகர முடிவுக்குள் அறிவிக்கப்படுமென்றும் இதுபற்றி பிரதமர் நேரு ஆலோசனை செய்துவருவதாகவும் அறியப்படுகிறது.

காமராஜ் திட்டத்தின்கீழ் மந்திரிபதவியைத் துறந்த திரு. லால்பகதூர் சாஸ்திரி மீண்டும் மந்திரியாவார் என்றும் தெரிகிறது. ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனையும் பிரதமர் நேருவையும் திரு. சாஸ்திரி சந்தித்துப் பேசியுள்ளார்.

முன்னாள் காங்கிரஸ் அக்ராசனர் திரு. டி. சஞ்சீவையாவும் மந்திரியாவாரென்றும் தெரியவருகிறது

## விவசாயிகளின் ஊர்வலத்துக்கு பொலிஸார் தடை?

### தென்னக்கோன் தலைமையில் நடைபெறவிருந்ததாம்

கொழும்பு, செவ்

மண்வெட்டி தாங்கிய 2,000 விவசாயிகள் முன்னாள் உதவி அமைச்சர் திரு. முதியான்சே தென்னக்கோன் தலைமையில் நிக்கவரெட்டியாவில் இருந்து கொழும்புக்குக் கால்நடையில் ஊர்வலமாக வரத் திட்டமிட்டிருந்ததைத் தடைசெய்யச் சென்ற இரவு பொலிசார் நடவடிக்கை எடுத்ததாக அறியப்படுகிறது.

நிக்கவரெட்டியா தொகுதியில் உள்ள ஐயநாயக தேவாலயத்திலிருந்து இன்று காலை 6 மணிக்கு இந்த விவசாயிகள் அரசாங்கத்துக்கு மகஜர் ஒன்றைக் கொண்டு புறப்படத் திட்டமிட்டிருந்தார்கள். இவர்கள் வாழ்க்கைச் செலவு உயர்ந்துள்ளது குறித்து அரசாங்கத்துக்கு மகஜர் ஒன்றையும் - எடுத்து வரவிருந்தார்கள்.

இந்த விவசாயிகள் இன்று இரவு குருநாகலில் தங்கி நாளை இரவு பசியாலையிலும் வியாழக்கிழமை இரவு பேலியகொடையிலும் தங்கி வர ஏற்பாடு செய்திருந்தார்கள்.

வெள்ளிக்கிழமை காலை காலி மைதானத்துக்கு வந்து அங்கு ஒரு கூட்டத்தையும் நடத்தி பின்னர் அரசாங்கத்துக்குத் தாம் கொண்டு வந்த மகஜரைச் சமர்ப்பிப்பதெனத் தீர்மானித்திருந்தனர்.

திரு. தென்னக்கோன் பிரதிநிதித்துவம் வகித்துவந்த நிக்கவரெட்டியா தொகுதியை யு. என். பி.யிடம் ஒப்படைப்பது பற்றியும் அம்மகஜரில் குறிப்பிட்டிருந்ததாக அறியப்படுகின்றது.

இவ்விதஊர்வலம் நடைபெறுவதற்கு ஆறுமணித்தியாலத்துக்குமுன் பொலிஸாருக்கு இதுபற்றி அறிவிக்கப்பட வேண்டுமென்றும் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக் கூடிய அச்சம் இருக்குமாயின் இந்த ஊர்வலத்துக்கு 'பர்மிட்' மறுக்கும் உரிமை பொலிஸாருக்குண்டு என்றும்பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தனர்.

## "பொலிஸ் அதிகாரியை உடனே இடம்மாற்றவும்"

### பாடசாலை சம்பவம்பற்றி பட்டின சபை கோரிக்கை

முல்லைத்தீவு, செவ்

முல்லைத்தீவு பொலிஸ் அதிகாரியை உடனடியாக இடமாற்றம் செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்று முல்லைத்தீவு பட்டினசபையின் விசேஷ கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது. இத்தீர்மானத்தின் பிரதியை பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு பட்டின சபைத் தலைவர் அனுப்பிவைத்துள்ளார்.

பட்டினசபை நிறைவேற்றிய தீர்மானம் வருமாறு:-

16-1-64 ல் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் வகுப்புகள் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் முல்லைத்தீவு பொலிஸ் அதிகாரிசட்டவிரோதமான முறையில் வகுப்பில் புகுந்து மாணவர் ஒருவரை [illegible] முறையில் தாக்கியதையிட்டு மாணவரும் பெற்றோரும் [illegible] ... சமாளிப்ப[illegible] அதிகாரியை உடனடியாக இடமாற்றம் [illegible] இச்சபை தீர்மானிக்கிறது.

[illegible] தீவு [illegible] வித்தியாலய [illegible] இன்னும் [illegible] செல்லவில்லை [illegible] தக்கது

## தமிழர்முன்னணி பற்றி தமிழரசுக் கமிட்டி ஆராயும்

நல்லூர், புதன்

தமிழரசுக் கட்சியின் காரிய கமிட்டிக் கூட்டத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்கள அமுல்நிலை பற்றி விரிவாக ஆராயப் படவிருக்கின்றது. ஜனவரி முதல்திகதியிலிருந்து நாடெங்கிலும் சிங்களம் அமுலாகியிருப்பது எந்த அளவில் உண்மை என்பதுபற்றி இந்தக் காரியக் கமிட்டிக்கூட்டத்தில் விவாதிக்கப்படும். காரியக் கமிட்டி வவுனியாவில் வருகிற சனி ஞாயிற்றுக் கிழமைகளில் கூடுகிறது.

தமிழரசுக் கட்சித்தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் அடுத்த நடவடிக்கைபற்றி முடிவுசெய்யும். தமிழரசுக்கட்சியின் உதவிக் காரியதரிசியான திரு. கதிரவேற்பிள்ளை தமது பதவியை ராஜினமாச் செய்ததுபற்றியும் காரியக் கமிட்டி ஆலோசிக்கும்.

தமிழ் பகுதிகளில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் பயனாக ஏற்பட்டுள்ள நிலைபற்றியும் அவதானிக்கப்படுமெனத் தெரிகிறது.

தமிழர் முன்னணி ஒன்று அமைப்பதுபற்றிய கருத்துப் பற்றியும் காரியக்கமிட்டிக் கூட்டத்தில் ஆலோசிக்கப்படலாம் என்று தெரிகிறது. நாரம்பிட்டியாவில் நடைபெற்றுள்ள சம்பவம் பற்றியும் ஆலோசிக்கப்படுமெனத் தெரிகிறது.

## மணி வாக்கு

பிறப்பினுல் எல்லா மக்களும் சமமானவர்கள். உயிர்வாழ்தல், சுதந்திரம், இன்பவாழ்வு, இவைகளைப் பொருத்த, அகற்ற முடியாத உரிமைகள் மக்களுக்கு ஆண்டவனுல் அளிக்கப்பட்டவை. இந்த உரிமைகளைப் பாதுகாப்பதற்கென்றே ஆளப்படும் மக்களிடமிருந்து அதிகாரத்தைப்பெற்று, அரசாங்கங்கள் இயங்குகின்றன.

— தாமஸ் ஜெஃபர்சன்

ஈழநாடு
EELA NADU
EELANADU National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 889

யாழ்ப்பாணம்சோபகிருதுஆண்டு
தை மீ 9 உ (22-1-64)

## அரசினருக்கு சட்டப் பாதுகாப்பு

சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களென தவறுதலாகக் கைது செய்யப்படுபவர்கள் அல்லது தடுத்து வைக்கப்படுபவர்கள் அல்லது நாட்டைவிட்டு வெளியேற்றப்படுபவர்கள் ஆகியோரால் வழக்குத் தொடரப்படுவதிலிருந்து பிரதமரையும் வெளிவிவகார இலாகாக்களின் உத்தியோகத்தரையும் பாதுகாக்க விரைவில் சட்டம் கொண்டுவரப்பட விருப்பதாகவும் இராணுவத்தினருக்கும் சட்டப் பாதுகாப்பு அளிக்கப்படுமென்றும் ஒரு செய்தி கூறுகிறது. இது உண்மையாயின் யாரும் மகிழ்ச்சியடைய முடியாது.

சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடுக்க வேண்டியது அவசியம். இதை ஆதரிப்பவர்கள் இந்த நாட்டில் யாரும் இருக்க முடியாது. இது மனிதர் சம்பந்தப்பட்ட பிரச்னை. இதை மனிதாபிமானத்துடன்தான் கவனிக்கவேண்டும்.

சட்டவிரோதக் குடியேற்றத் தடுப்பு நடவடிக்கையென்ற போர்வையில் இலங்கையர், குறிப்பாக இந்நாட்டிலேயே பிறந்து வளர்ந்து, வெளிநாட்டு மண்ணைக்கூட பார்த்தறியாத அப்பாவிகளான சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர் பலர் பெரும் இன்னல்களுக்குள்ளாகும் சம்பவங்கள் பல நடைபெற்றுள்ளது நாடறிந்த உண்மை. ஏற்கனவே அமுலில் உள்ள சட்டத்தின் கீழ் யாரையும் சட்டவிரோதக் குடியேற்றக்காரர் என்ற சந்தேகத்தின் மீது கைதுசெய்து காவலில் வைக்க அதிகாரமுண்டு. இந்தச் சட்டத்தினுல் இலங்கையர்கூட தமது நாட்டில் சுதந்திரமாக நடமாட முடிவதில்லை. கோயில்களுக்கு சுவாமி தரிசனம் செய்வதற்குச் செல்லக்கூட அஞ்சவேண்டியுள்ளதென்பதற்கு கதிர்காமத்தில் நள்ளிரவில் சாதுக்கள் கைதுசெய்யப்பட்ட சம்பவம் ஓர் உதாரணமாகும்.

குடியேற்ற வெளியேற்றச்சட்டம் அமுல் செய்யப்படுகையில் சட்டவிரோதக் குடியேற்றக்காரர் எனச் சந்தேகிக்கப்படுபவர்களைக் கைது செய்யவோ தடுத்துவைக்கவோ வெளியேற்றவோ நேரிடுகிறது சிலசமயங்களில் சட்டவிரோதக் குடியேற்றக்காரர் அல்லாதவர்களும் கைதுசெய்யப்படுவதும் காவலில் வைக்கப்படுவதும் சாத்தியமாகிறது. இதை அரசாங்கம் தெரிந்துகொண்டுதான் இவ்விதம் கைதுசெய்யப்படும் சட்டவிரோதக் குடியேற்றக்காரரல்லாதவர்கள் எடுக்கக்கூடிய சட்ட நடவடிக்கைகளிலிருந்து பிரதமரையும் அதிகாரிகளையும் பாதுகாக்க சட்டம் கொண்டுவர முயற்சி செய்கிறது.

அப்பாவி மக்கள் அநியாயமாகக் கைதுசெய்து காவலில் வைக்கப்படுவதைத் தடுப்பதற்கு முயற்சி செய்வதற்குப் பதிலாக பிரதமரையும் இதர அதிகாரிகளையும் சட்ட நடவடிக்கைகளிலிருந்து பாதுகாப்பதற்காக சட்டம் கொண்டுவர முயற்சி செய்வது மக்களுக்காக அரசாங்கமா, அல்லது அரசாங்கத்துக்காக மக்களா என்ற கேள்வியை எழுப்புகிறது.

பிரதமருக்கும் அதிகாரிகளுக்கும் பாதுகாப்பளிக்கும் சட்டம் கொண்டுவரும் அதே சமயம் சட்டத்துக்கு மாறாக போதிய ஆதாரமின்றி சட்டவிரோதக் குடியேற்றக்காரர் என்ற சந்தேகத்தின்மீது சட்டவிரோதக் குடியேற்றக்காரர் அல்லாதவர்களைக் கைது செய்பவர்களையும் கைது செய்து காவலில் வைப்பவர்களையும் தண்டிக்கக் கூடிய சட்டம் ஒன்றையும் கொண்டு வந்தால் பொதுமக்களுக்கும் பாதுகாப்பளிப்பதாகவிருக்கும்.

என்றுலும்புதிய புதியசட்டங்களைக்கொண்டு வந்து மக்களுக்குஇன்னல் கொடுப்பதைவிடுத்து சட்ட விரோதக் குடியேற்றப் பிரச்னையையும், இந்திய வம்சாவளியினர் பிரச்னையையும் மனிதாபிமானத்துடன், இந்திய அரசாங்கத்தின் உதவியையும் பெற்று விரைவில் தீர்வு காணமுயற்சி செய்வதே, இப்பிரச்னைகளுக்கு சரியான பரிகாரமாகும்.

ஏற்கனவே நாம் இப்பத்திகளில் குறிப்பிட்டிருந்தது போல் இந்தியக் கரையோரப் பகுதிகளிலும் இலங்கைக் கரையோரப் பகுதிகளிலும் இரு நாட்டுப் பொலிசாரும் கூட்டாகக்காவல்புரிவது,சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடுக்க வழி செய்வதுடன், வீண் புகார்களுக்கும் இடம் வைக்க மாட்டாது. இதற்கு மாறாக இராணுவத்தினருக்கும் சட்டப் பாதுகாப்பு அளிக்க முன் வருவதாயின் நாட்டில் மக்கள்,குறிப்பாக சிறுபான்மை இனத்தவர் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழ முடியாத நிலை ஏற்படும். இதற்கு சமீப காலங்களில் வடக்கு, கிழக்குக் கரையோரப் பகுதிகளில் நடைபெற்ற சம்பவங்களே போதிய சான்று. இதை அரசாங்கம் கருத்தில் கொள்ளும் என்று நம்புகிறேம்.

## மவுண்ட்பேட்டன் வருகிறர்

கொழும்பு, திங்கள்

பிரிட்டிஷ் பிரதம தளபதி மவுண்ட்பேட்டன் பிரபு வருகிற பெப்ரவரி மாதம் முற்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கிறர்.

# கூட்டுறவு இலாகா அதிகாரி தாக்கப்பட்டார்
## கணக்குப் பரிசோதனை முடிந்து திரும்புகையில்

பருத்தித்துறை, செவ்வாய்

திக்கம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கணக்குப் பரிசோதனைக்குச் சென்று திரும்புகையில் கூட்டுறவு இலாகா இன்ஸ்பெக்டர் திரு. எஸ். ஆழ்வாப்பிள்ளை என்பவரை மூவர் தாக்கியதுடன் துவிச்சக்கரவண்டி உட்பட அவரிடம் இருந்த கணக்குப் புத்தகம் முதலியவற்றையும் எடுத்துச் சென்றுவிட்டார்களெனக் கூறப்படுகிறது.

இது சம்பந்தமாக சந்தேகத்தின்பேரில், பருத்தித்துறைப் பொலிசார் எஸ். தர்மலிங்கம், என். சுப்பிரமணியம் ஆகிய இருவரைக் கைது செய்து நீதிபதிமுன் ஆஜர் செய்தனர்.

இவர்களிடம் பரிசோதகர் ஓடிச் சென்ற துவிச்சக்கர வண்டியும் கழற்றப்பட்ட நிலையில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

நீதிபதி இருவரையும் விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டதுடன், தம்பையா என்னும் மற்றேர் சந்தேக நபரைக் கைது செய்ய வாரண்ட் பிறப்பித்தார்.

# பென்ஷன் பகுதியில் விண்ணப்பங்கள் குவிகின்றன

கொழும்பு, செவ்வாய்

திறைசேரியிலுள்ள பென்சன் பகுதியில் மீண்டும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அரசாங்க சேவையிலிருந்து கடந்த வருட முடிவில் ஓய்வு பெற்ற ஐயாயிரத்திற்கு அதிகமான பேர்களின் விண்ணப்பங்கள் இன்னும் கவனிக்கப்படாமலிருந்து வருகிறது.

இவ்வேலைகளைக் கவனிப்பதற்கு பென்சன் பகுதியில் போதியளவு உத்தியோகத்தர்கள் இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தினமும் ஏராளமான கடிதங்கள் பென்சன் பகுதியில் வந்து குவிகின்றது.

கிழமை தோறும் நூற்றுக்கணக்கான அரசாங்க ஊழியர்கள் திறைசேரியிலுள்ள பென்சன் பகுதிக்கு வந்து முற்றுகையிடுகிறர்கள். ஏமாற்றமடைந்த அரசாங்க ஊழியர் ஒருவர் தாள் 5 மாதங்களுக்கும் முன் இளைப்பாறியதாகவும், ஆனல் இதுவரை பென்சன் வழங்கப்படவில்லையென்றும் தெரிவித்தார்.

இதுசம்பந்தமாக திறைசேரி உத்தியோகத்தர் கூறியதாவது: பென்சன் பகுதிக்கு குறைந்தது 20 உத்தியோகத்தர்கள் மேலதிகமாக வேண்டும். அப்பகுதியில் போதியளவு இடவசதியும் இல்லாமலிருக்கின்றது. வருடந்தோறும் சராசரி 3000 அரசாங்க ஊழியர்கள் ஓய்வு பெறுகிறர்கள். இதன்படி மாதம் 250 அரசாங்க ஊழியர் ஓய்வு பெறுகிறர்கள். கடந்த வருடம் மொழிப்பிரச்னை காரணமாக மேலதிகமாக 6000 அரசாங்க ஊழியர்கள் ஓய்வு பெற்றுள்ளார்கள். ஏராளமான விதானைமார்களும் கடந்த வருடம் ஓய்வுபெற்றுள்ளனர். இந்த விண்ணப்பங்களையெல்லாம் கவனிப்பதற்கு குறைந்தது ஒரு வருடம் செல்லுமென்று பென்சன் பகுதி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் நிதிமந்திரி பென்சனை தாமதிப்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவித்திருந்தார்.

## மகா சிவராத்திரி

தெல்லிப்பழை, செவ்வாய்

தெல்லிப்பழை வாலிபர் சங்கம் சிவராத்திரி தினத்தை அடுத்த மாதம் 11-ந் தேதி கொண்டாடுவதென முடிவு செய்துள்ளது.

மகாசிவராத்திரி தினம் சம்பந்தமாக இருந்துவரும் பிரச்சினைகளில் கவனமெடுக்காது முன்னேஸ்வரத்தில் நடப்பது போல மகாசிவராத்தி தினத்தைப் பெப்ரவரி 11-ந் தேதி நடத்துவதற்கான ஏற்பாடுகள் மெய்யப்படுகின்றன.

சிவராத்திரி தினத்தைச் சிறப்பானமுறையில் மாவிட்டபுரத்தில் நடத்துவதெனவும் சொற்பொழிவுகள், பிரசங்கங்களுக்கு முக்கிய இடமளிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## "நல்லெண்ணம் நிலவவேண்டும்"
### உதவி மந்திரி விருப்பம்

ஹகவத்தை, செவ்வாய்

"தமது கடமைகளை நிறைவேற்றும்போது தவறுகளைச் செய்யும் உத்தியோகத்தர்கள் இருக்கிறர்கள். இது சாதாரணமாக இடம்பெறுவதுதான். ஆனல் இந்த உத்தியோகத்தர்கள் தமக்கும் மற்ற உத்தியோகத்தர்களுக்குமிடையில் நல்லெண்ணம் நிலவ முயலவேண்டும். பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள இவ்வித சூழ்நிலை நிலவவேண்டும்" என காணி நீர்ப்பாசன உதவி மந்திரி திரு. வி. டி. ஜி. கருணரத்ன ஹகவத்தை மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற ஹகவத்தை ஆஸ்பத்திரி சேமநல சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

சேமநல சங்கங்களின் முக்கியத்துவத்தையும் இதனல் ஆஸ்பத்திரி போன்ற நிலையங்களுக்கு ஏற்படும் நன்மை குறித்தும் திரு. கருணரத்ன விளக்கிக் கூறினர்

## 'தகுதி உடையவரே விஞ்ஞானம் கற்கவேண்டும்'
### —எம். பி.

அம்பலாங்கொடை, செவ்

'தற்கால மாணவர்கள் எல்லோரும் விஞ்ஞானத்தைக் கற்பதிலேயே அதிக பிரியப்படுகிறர்கள். இது சரியானதல்ல, எல்லா மாணவர்களுக்கும் விஞ்ஞானம் படிக்கக்கூடிய தகுதியிருக்கும் எனச் சொல்லிவிட முடியாது. அப்படி எல்லோரும் விஞ்ஞானத்தைப் படித்தாலும் இவர்கள் எல்லோருக்கும் வேலை கிடைக்காமலிருக்கும்போது இதனுல்வரும் நன்மைதான் என்ன என்று அம்பலாங்கொடை எம். பி. திரு. பி. டி. எல். குலரத்தின வீரகொட மகாவித்தியாலயத்தில் புதிதாகக் கட்டப்படவிருக்கும் விஞ்ஞான ஆய்வுக்கூடத்துக்கான அடிக்கல்லை நாட்டிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. குலரத்தின மேலும் பேசுகையில் கூறியதாவது:-

வேலையில்லாத் திண்டாட்டம் அரசாங்கத்தினுல்மட்டும் தீர்க்கக்கூடிய ஒரு பிரச்னையல்ல. இது ஒரு சிரமமான காரியம். மக்களும் இது குறித்து நன்கு சிந்திக்கவேண்டும்.

மரவேலை செய்பவர்கள், கள்ளிறக்குபவர்கள், வீட்டுத் தள்பாடங்கள் செய்பவர்கள் ஆகியோரது பற்றுக்குறை இப்போது பெரிதும் இருந்துவருகிறது. எம்மால், எமது இளைஞரால் இந்தப் பிரச்னையைத் தீர்க்க முடியாவிட்டால் இந்தியாவிலிருந்தோ வேறு எந்த நாட்டிலிருந்தோ இத்தகையவர்களை வருவிக்கவேண்டி நேரிடும்.

விஞ்ஞானம் கற்கத் தகுதி வாய்ந்தவர்களையே விஞ்ஞானம் கற்க அனுமதிக்கவேண்டும். ஆசிரியர்களால் இத்தகைய மாணவர்கள் தேர்ந்து எடுக்கப்படவேண்டும் இது விஷயத்தில் பெற்றேரும் உதவி செய்யவேண்டும்.'

ரத்கம எம். பி. திரு. டி. ஈ. திலகரத்ன கூட்டத்துக்குத் தலைமை தாங்கினர்.

## தேர்தல் கமிஷனருக்கு அதிக அதிகாரம

கொழும்பு, செவ்வாய்

ஆடிட்டர் ஜெனரலுக்குள் அந்தஸ்து போன்று பாராளுமன்ற தேர்தல் கமிஷனருக்கும் வழங்குவதற்காக அரசியல் சட்டத்தில் சில திருத்தங்கள் கொண்டுவர அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தேர்தல் கமிஷனருக்கு எந்த விதமான அரசியல் கட்டுப்பாடும் இருக்கக்கூடாதென்று பாராளுமன்ற கமிட்டி சிபார்சு செய்ததைத் தொடர்ந்தே அரசாங்கம் இவ்வாறு தீர்மானித்துள்ளது.

## முன்னேஸ்வர ஆலயத்தில் சிவராத்திரி பூசை

சிலாபம், செவ்வாய்

முன்னேஸ்வர ஆலயத்தில் தை மாதம் 29 ம் திகதி சிவராத்திரிபூசை நடைபெறவிருக்கிறது. வருடந்தோறும் இவ்வாலயத்தில்பக்தர்களால்வெகு விமரிசையாக சிவராத்திரிபூசை கொண்டாடப்படுவது போல் இந்த வருடமும் கொண்டாடப்படவிருக்கிறது. நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும்பெருந்திரளான சைவ மக்கள் இப்பூசையில் கலந்துகொள்ளவிருக்கிறர்கள்.

ஆலயத்தின் பிரதம குருக்களான ஸ்ரீ சு. சுப்பிரமணிய குருக்கள் சிவராத்திரி பூசைக்கான ஒழுங்குகளைச் செய்து வருவதோடு, பக்தர்களுக்கு சுகாதார வசதியளிப்பதற்கான ஒழுங்குகளையும், இங்குள்ள சைவ அன்பர்களின் ஒத்துழைப்புடன் செய்துவருகிறர்.

## திருட்டு வழக்கில் இருவருக்கு விளக்க மறியல்

பருத்தித்துறை, செவ்வாய்

கரவெட்டி வடக்கைச் சேர்ந்த சித்தர் ஆழ்வார் என்பவர் வீட்டில் ரூபா 7835 பெறுமானமுடைய நகைகளையும், பணத்தையும் திருடியதாக அல்வாய் தெற்கைச் சேர்ந்த சின்னன் செல்லன்மீதும் இத்திருட்டுப் போனவை எனக் கருதப்பட்ட பணம் ரூபா 1000த்தையும், ரூபா 3000 பெறுமதியான நகைகளையும் வைத்திருந்ததாகச் செல்லனின் தாயான சின்னன் தெய்வானை மீதும் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை நீதிபதி திரு. ஏ. வைத்தியலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நீதிபதி இருவரையும்முறையே இம்மாதம் 30-ம், 31-ம் தேதி வரையும் விளக்க மறியலில் வைக்கும்படி உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தார்.

## உத்தியோக . . .
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலமையை அரசாங்க அதிபருடன் கலந்தாலோசித்தார்.

அகில இலங்கை சுகாதார இலாகா தொழிலாளர் சங்க வட,கீழ் மாகாண கிளைகள் இம்மாதம் 26-ந் திகதி கூடி உத்தியோக மொழி அமுல் சம்பந்தமாக சங்க அங்கத்தவர்கள் பாதிக்கப்படுவதை யிட்டு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஆராய்வார்ளென்றும் சங்க அங்கத்தவர்கள் மீது தொடர்ந்து சிங்களம் திணிக்கப்பட்டுவந்தால் தொழிற்சங்க நடவடிக்கை எடுப்பது பற்றி ஆராயப்படுமென்றும் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளைக்காரிய தெரிவித்தார்.

# வகுப்புக்கலகங்களை தடுக்க இந்தியா கூறிய யோசனைக்கு பதில் இல்லை

## பரிசீலனை செய்வதாக பாகிஸ்தான் அதிகாரி தகவல்

கராச்சி, ஜன. 21

இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் வகுப்புக் கலவரங்கள் ஏற்படாமல் தடுக்க இரு நாடுகளின் அதிகாரிகள் சந்தித்து ஆலோசனை நடத்தலாமென்றும் இரு நாடுகளிலும் அமைதியைப் பாதுகாக்குமாறு இரு நாட்டு அதிபர்களும் கூட்டாக வேண்டுகோள் விடலாமென்றும் இந்திய அதிபர் டாக்டர் ராதாகிருஷ்ணன், பாகிஸ்தான் அதிபர் பீல்ட் மார்ஷல் அயூகானுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்த யோசனை பற்றி பாகிஸ்தான் பரிசீலனை செய்து வருவதாக பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சு அதிகாரியொருவர் தெரிவித்தார். விரைவில் இந்திய ஜனாதிபதிக்குப் பதில் அனுப்பப்படுமென்றும் அவர் கூறினார்.

இந்திய ஜனாதிபதியின் யோசனைக்கு இதுவரை பாகிஸ்தான் அதிபரிடமிருந்தோ, அரசாங்கத்திடமிருந்தோ பதில் கிடைக்கவில்லை.

ஆயினும் பாகிஸ்தானிலுள்ள செல்வாக்குள்ள 'டாண்' என்னும் பத்திரிகை இந்திய ஜனாதிபதியின் யோசனையை 'வஞ்சகப் பொறி' என வர்ணித்துள்ளது. இதே போன்று பாகிஸ்தானின் மற்றும் சில பத்திரிகைகளும் இந்திய ஜனாதிபதியின் யோசனையை "தேவையற்றது," "அர்த்தமற்றது" என்று குறிப்பிட்டுள்ளன.

### தகவல் இல்லையென நந்தா தகவல்

இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் வகுப்புக் கலவரங்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்கான வழிவகைகளை ஆராய்வதற்கு இரு நாடுகளும் மந்திரிகள் கட்டத்தில் ஆலோசனை நடத்தலாமென இந்திய அரசாங்கம் தெரிவித்த ஒரு யோசனைக்கு பாகிஸ்தானிடம் இருந்து பதில் வரவில்லையென்று இந்திய உள்நாட்டு மந்திரி திரு.

(4-ம் பக்கம் பார்க்க)

---

# தங்கனிக்கா தலைநகரில் அமைதி நிலவுகிறது

## ஊரடங்குச் சட்டம் அமுல்; இராணுவ அணி முகாம் திரும்பியது

### தலைவர் நியார்ரே பற்றி தகவல் இல்லை

லண்டன், ஜன. 21

தங்கனிக்காவின் தலைநகரான தாருல்-இஸ்லாமில் நேற்று இராணுவத்தின் ஒரு அணி நடத்திய கிளர்ச்சிக்குப் பின் இப்பொழுது அங்கு அமைதி நிலவுவதாகவும் ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டிருப்பதாகவும் அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றைய கலகத்தில் பதினொருபேர் மாண்டதாகவும் நூற்றுக்கு மேலானோர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்படுகிறது. கலகம் தோன்றியதும் நியார்ரேயுடன் மறைந்த அவரது பத்திரிகைக் காரியதரிசி நேற்று மீண்டும் தோன்றினர். அதிபர் நியார்ரே சுகமாகவும் பாதுகாப்பாகவும் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். நாட்டின் நிர்வாகம் அதிபர் நியார்ரேயிடமே இருப்பதாகவும் அவர் கூறினர். ஆனல் அதிபர் நியார்ரே எங்கே இருக்கிறர் என்று அந்த அதிகாரி தெரிவிக்கவில்லை.

#### பாதுகாப்பா தடுப்புக்காவலா?

அதிபர் மாளிகையைச்சுற்றி இராணுவத்தினர் காவல் புரிந்து கொண்டிருக்கின்றனர். அதிபருக்கும் பாதுகாப்பளிப்பதற்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா அல்லது அவர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளாரா என்பது தெரியவில்லை.

மக்களை அமைதியாக இருக்குமாறும் இராணுவத்தினரில் ஒருபிரிவினர் தப்பு எண்ணம் காரணமாகக் கிளர்ச்சி செய்ததாகவும் கிளர்ச்சிக்காரர் தமது முகாமுக்குத் திரும்பிவிட்டதாகவும் அதிபர் நியார்ரே வானொலிமூலம் வேண்டுகோள் விடுத்ததாக ஒருசெய்தி தெரிவிக்கிறது.

இப்பொழுது நாட்டின் நிர்வாகம் தங்கனிக்கா வெளிவிவகார அமைச்சரின் பொறுப்பிலிருப்பதாகவே தோன்றுகிறதென்றும் அமைச்சர் விடுத்த ஒருவேண்டுகோளில் மக்களை அவர்களது வீடுகளில் இருக்குமாறும் அமைதியைப் பேணுமாறும் வேண்டிக் கொண்டார்.

விமானநிலையம், தபாற்கந்தோர் ஆகியவை இன்னமும் கலகக்காரர்வசம் இருப்பதாக மற்றொரு செய்தி கூறுகிறது. அதிபர் நியார்ரேயைப்பற்றி அறிந்து கொள்வதற்கு தங்கனிக்கா தலைநகரிலுள்ள பிரிட்டிஷ் ஹை மிஷனருடன் தொடர்பு கொள்ள முயற்சி செய்தும் அவருடன் தொடர்பு கொள்ள முடியாமல் போய்விட்டதென்றும் பிரிட்டிஷ் காமன்வெல்த் மந்திரி திரு. டங்கன் சாண்டிஸ் தெரிவித்தார்.

#### பிரிட்டிஷ் பிரஜைகள்

இரண்டாயிரம் துருப்புக்களைக் கொண்ட பிரிட்டிஷ்

(4-ம் பக்கம் பார்க்க)

---

### குருஷ்சேவுக்கு நேருவின் நன்றி

மாஸ்கோ, ஜன 21

பிரதமர் நேருவை சோவியத் யூனியனுக்கு வந்து ஓய்வெடுத்துக் கொள்ளுமாறு சோவியத் பிரதமர் குருஷ்சேவ் விடுத்த அழைப்புக்காக அவருக்கு நேருவின் சார்பில் நன்றி தெரிவிக்குமாறு மாஸ்கோவிலுள்ள இந்திய ஹைகமிஷனருக்கு திருமதி இந்திரா காந்தி தெரிவித்துள்ளார். தற்சமயம் திரு. நேரு இந்தியாவைவிட்டு வெளியே செல்ல முடியாதிருப்பதாயும், திரு. குருஷ்சேவிடம் கூறும்படி ஹைமிஷனரைக் கேட்டுள்ளார்.

### நேதாஜி நினைவு முத்திரைகள்

புதுடில்லி, ஜன. 21

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் 67-வது பிறந்ததினத்தை முன்னிட்டு, வருகிற 23ம் திகதி 2 விசேஷ தபால் முத்திரைகள் வெளியிடப்படும். நேதாஜி ஜயந்தியை பம்பாய், கல்கத்தா. சென்னை, புதுடில்லி ஆகிய இடங்களில் கொண்டாடுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுவருகின்றன கட்டாக்கில் அவர் பிறந்த இல்லத்திலும் நிகழ்ச்சிகள் நடைபெறும்

---

# மலேசியா: உச்சி மகாநாடு நடைபெறும் சூழ் நிலை

## சமாதானத் தீர்வு ஏற்படுமென ரொபர்ட் கென்னடி நம்பிக்கை

கோலாலம்பூர், ஜன. 21

மலேசியாத் தகராறுக்குச் சமாதான தீர்வு கிடைக்குமெனத் தாம் நம்புவதாக அமெரிக்க அட்டர்ணிஜெனரல் திரு ரொபர்ட் கென்னடி நேற்று இங்குவந்து சேர்ந்ததும் நிருபர்களிடம் கூறினர்.

மலேசியாத் தகராறுக்கு சுமுகமான தீர்வுகாணும் முயற்சியில் தென்கிழக்காசியத் தலைவர்களுக்கிடையில் உச்சிமகாநாடு ஒன்றை நடத்துவதற்காக தலைவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திவரும் திரு. ரொபர்ட் கென்னடி நேற்று மணிலாவில் பிலிப்பைன்ஸ் அதிபர் மக்கபகலை சந்தித்துப் பேசியபின் கோலாலம்பூர் வந்துள்ளார்.

இங்கு மலேசிய பிரதமர் துங்குஅப்துல் ரஹ்மானைச் சந்தித்துப் பேசியபின் நாளை இங்கிருந்து புறப்பட்டு மீண்டும் இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்ணோவைச் சந்திப்பார்.

டோக்கியோவுக்கு விஜயம் செய்திருந்த இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்ணோ ஜாகர்த்தா திரும்பியுள்ளார்.

கோலாலம்பூரில் மலாயாப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மானும் கம்போடியத் தலைவர் இளவரசர் நேராடம் சிஹனூக்கும் மலேசியா-இந்தோனேஷியத் தகராறு பற்றி ஆலோசனை செய்தனர்.

தங்கள் பேச்சுவார்த்தைகள் நிலைமையை ஆராயும் வகையில் இருந்ததாக துங்கு அப்துல் ரஹ்மான் பின்னர் தெரிவித்தார்.

மலேசியா சம்பந்தமாக தென்கிழக்காசிய தலைவர்களுக்கிடையிலான உயர்தர பேச்சுக்கான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக இந்தோனேஷிய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்

---

# காஷ்மீர்: பாதுகாப்பு சபையை கூட்ட பாக். கோரிக்கை

## நிலைமை மோசமடைவதாக ஜுல்பிகார் அலி புட்டோ புகார்

நியுயோர்க், ஜன. 21

**காஷ்மீர் பிரச்னை பற்றி விவாதிப்பதற்கு ஐ. நா. பாதுகாப்புச் சபையை உடனடியாகக் கூட்ட வேண்டுமென்று பாகிஸ்தான் கேட்டுள்ளது.**

பாகிஸ்தானின் இக்கோரிக்கை பற்றி பாதுகாப்பு சபை அங்கத்துவ நாடுகள் உடனடியாக ஆலோசனை செய்வதாகவும், விரைவில் அநேகமாக வெள்ளிக்கிழமை பாதுகாப்பு சபை கூடுமென்றும் பாகிஸ்தான் வட்டாரங்கள் தெரிவிக்கன.

காஷ்மீரில் சமீபத்தில் நடைபெறும் சம்பவங்கள் காஷ்மீர் மக்களுக்கும், பாகிஸ்தான் மக்களுக்கும் கவலையளித்துள்ளதாகவும் இது விஷயத்தைப் பாதுகாப்பு சபை உடனடியாக ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் காஷ்மீர் மக்களும், பாகிஸ்தான் மக்களும் வேறு வழிகளைக் கையாளவேண்டி நேரிடுமென்றும் பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

ஐ. நா. பாதுகாப்பு சபைத் தலைவருக்குப் பாகிஸ்தான் வெளிவிவகார மந்திரி ஜுல்பிகார் அலி புட்டோ எழுதியுள்ள ஒரு கடிதத்தில், காஷ்மீர் மக்களின் விருப்பத்திற்கு மாறாகவும், பாதுகாப்புச் சபையின் முன்னைய தீர்மானங்களுக்கு விரோதமாகவும் காஷ்மீரை இந்தியாவுடன் ஒன்றாக்கிக் கொள்ளும் நடவடிக்கைகளை இந்திய அரசாங்கம் செய்து வருவதாகவும் இந்த முயற்சியின் ஒரு நடவடிக்கையாகவே பக்ஷி குலாம் மகம்மது பதவியிலிருந்து விலகி ஷம்சுதீன் பதவிக்கு நியமிக்கப்பட்டாரென்றும் தெரிவித்துள்ளார்.

ஷம்சுதீன் தமது மந்திரி சபையில் பெரும்பாலும் இந்துக்களை நியமித்துள்ளதுடன் சுயநிர்ணய உரிமை கோரிய முஸ்லிம் உத்தியோகத்தர்களைப் பதவி நீக்கம் செய்ததாகவும் ஜுல்பிகார் அலி புட்டோ தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் நடவடிக்கை அமைதியைக் குலைக்கக்கூடியதாகவும் முஸ்லிம்களை ஒழித்துக் கட்டுவதாகவும் இருக்கிறதென்றும் சட்ட விரோதமான முறையில் காஷ்மீருக்குள்ள விசேஷ அந்தஸ்தை இல்லாமல் செய்வதாகவுமிருக்கிறதென்றும் ஜுல்பிகார் அலி புட்டோ தெரிவித்துள்ளார்.

ஐ. நா.விலுள்ள பாகிஸ்தான் நிரந்தரப் பிரதிநிதி ஜுல்பிகார் அலி ஸபருல்லாகான் பாதுகாப்பு சபையின் அவசரக் கூட்டத்தைக் கூட்டவேண்டிய தன் அவசியத்தை நேற்று பாதுகாப்புச் சபைத் தலைவருக்கு விளக்கி ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

பாகிஸ்தானின் கோரிக்கையையும், நியாயத்தையும் எடுத்து விளக்குவதற்காக பாதுகாப்பு சபைக் கூட்டத்திற்கு வெளிவிவகார மந்திரி புட்டோ வருவாரெனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் ஸபருல்லாகான் தெரிவித்தார்.

காஷ்மீர் சம்பந்தமாக இந்தியா எடுக்கும் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தி வைக்கப் பாதுகாப்புச்சபை உத்தரவிட வேண்டும் என பாகிஸ்தான் கோரும் என்று ஸபருல்லாகான் தெரிவித்தார்.

### இந்திய பிரதிநிதி கருத்து

பாதுகாப்பு சபையின் அவசரக் கூட்டத்தை கூட்டவேண்டுமென்ற பாகிஸ்தானின் கோரிக்கை பற்றி ஐ. நா. விலுள்ள இந்திய நிரந்தரப் பிரதிநிதி திரு. பி. என். சக்கரவர்த்தி கருத்துத் தெரிவிக்கையில், காஷ்மீரில் புதிதாக சம்பவம் எதுவும் நிகழவில்லையென்றும் பாதுகாப்புச்சபை அவசரமாகக் கூட வேண்டிய அவசியம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லையென்றும் கூறினர்.

"காஷ்மீரில் புனிதசின்னம் காணமல் போனதைத் தொடர்ந்து பாகிஸ்தான் செய்த துவேஷப் பிரசாரம் கிழக்குப்பாகிஸ்தானில் வகுப்புக்கலகத்தை உண்டுபண்ணி சிறுபான்மையினருக்குத் தீமை செய்தது. இந்த மாதிரி மேலும் கலகங்களை ஏற்படுத்துவதற்கே பாதுகாப்புசபை இப்பொழுது கூடுவதும் வழிவகுக்கும்" என்று திரு. சக்கரவர்த்தி கூறினர்.

---

# மேற்குவங்கத்தில் தொடர்ந்தும் அமைதி நிலவுகிறது

## இதுவரை 9000பேர் கைது

கல்கத்தா, ஜன. 21

மேற்கு வங்காளத்தில் தொடர்ந்தும் அமைதி நிலவுகிறது. பாடசாலைகள் பலதிறக்கப்பட்டுவிட்டன. பாதுகாப்பு முகாம்களிலிருந்து முஸ்லிம்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிவிட்டனர். ஐந்துபகுதிகளில் இன்னமும் இராணுவம் காவல் புரிகிறது. இராணுவம் சிறிதுகாலத்திற்கு மேற்கு வங்காளத்தில் தங்கயிருக்குமென மேற்குவங்க முதன் மந்திரி தெரிவித்தார். இதுவரை 9000 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் கலகத்திலும் பொலிசாரின் துப்பாக்கிப் பிரயோகத்திலும் 134 பேர் மாண்டதாகவும் முதன் மந்திரி அறிவித்தார்.

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து அதிகாரிகள் மேற்கு வங்காளத்துக்கு வந்து கொண்டிருப்பதாகவும் 1800 இந்துக்கள் மேற்குவங்கம் வந்துள்ளதாகவும் திரு சென் தெரிவித்தார். கிழக்கு பாகிஸ்தானில் நிலைமையை நேரில் பார்வையிட வருமாறு கிழக்கு பாகிஸ்தான் தகவல் மந்திரியிடமிருந்து தமக்கு அழைப்பு வரவில்லையென்றும் அவர் கூறினர்.

### மீண்டும் ஊரடங்கு

கிழக்குப் பாகிஸ்தானில்டாக்காவிலும் நாராயண்கஞ்சிலும் மீண்டும் ஊரடங்குச்சட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது. சுமார் ஒருலட்சம் சிறுபான்மையினர் தங்கள் வீடுகளைவிட்டு வெளியேறி பாதுகாப்பு முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

குல்னா செல்வதற்கு டாக்காவிலுள்ள இந்திய உதவி ஹைகமிஷனருக்கு இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை.

# அஞ்சா நெஞ்சுடைய ஆசிரியர் இங்கு இருக்கிறார்கள்

கண்டி, செவ்வாய்

தங்களின் உரிமைகளைப் பெறுவதற்காக துப்பாக்கிக் குண்டுகளையும் எதிர்நோக்கக்கூடிய நெஞ்சுரமுள்ள ஆசிரியர்களும் இந்த நாட்டில் இருக்கிறார்கள் என்று சிறிலங்கா ஜாதிக குரு சங்க தலைவர் திரு. டி. பீட்டர் சில்வா நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

1956-ம் ஆண்டு ஏற்பட்ட மாற்றத்திற்கு ஆசிரியர்கள் பெருமளவில் ஒத்துழைத்தார்கள். ஆனால் இன்று அவர்களின் தலைவிதி எம். பி.க்களிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதால், அவர்கள் பயங்கர சோதனைக்குள்ளாகியிருக்கிறார்கள். எம். பி.க்கள் சட்டத்திற்கு மாறாக ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆசிரிய சங்கங்களின் அபிப்பிராயங்களை அறிய எம். பி.க்கள் மறுத்துவருகிறார்கள். ஆனால் இன்று, ஆசிரியர்களின் இடமாற்றம் காரணமாக தங்களுக்கு நித்திரை இல்லையென்று எம். பி.க்கள் கூறிவருகிறார்கள்.

இலங்கையிலுள்ள எம். பி.க்கள் தங்கள் கட்சியைப்பற்றியும், நண்பர்களைப்பற்றியும், தங்கள் தொகுதியைக் காப்பாற்றிக்கொள்ளும் வழிகளைப் பற்றியுமே அக்கறைப்படுகிறார்கள். ஊக்கமுள்ள ஆசிரியர்களுக்கு சுதந்திரம் மறுக்கப்படுகிறது. ஆசிரியர்களின் விஷயங்களில் எம். பி.க்கள் தலையிடுவதால், அரசாங்கத்தின் செல்வாக்கு குறைந்துவருகிறது,

பாடசாலைகளிலுள்ள பிரச்னைகளைப்பற்றி ஆராயாமல் ஆசிரியர்களின் இடமாற்றமும், நியமனங்களும் நடைபெறுவதால், கல்வித் தராதரம் குறைந்துவருகிறது. கிராமங்களிலுள்ள பாடசாலைகளில் ஆங்கில வகுப்புகளுக்கு எஸ். எஸ். ஸி. தராதர ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் பட்டினங்களிலுள்ள பாடசாலைகளுக்கு ஆங்கில பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலைமை மாறாவிட்டால் தேசிய கல்வித் திட்டத்திற்கான அத்திவாரம் ஆட்டங்கண்டுவிடும்.

---

## பாடசாலையில் சிங்கள கொப்பிகள் விற்பனை பெற்றோர் ஆட்சேபம்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம், வேம்படி மகளிர் பாடசாலையில் மாணவர்களின் பாவிப்புக்கென பாடசாலையில் விற்பனை செய்யப்படும் கொப்பிகளின் முன் பக்க அட்டையிலும், பின்பக்கத்திலும் தனிச் சிங்களம் மட்டுமே அச்சிடப்பட்டுள்ளதாக பெற்றோர் புகார் கூறுகின்றனர்.

பாடசாலையின் பெயர் மட்டுமே ஆங்கிலத்திலும் மற்ற விபரங்களெல்லாம் சிங்களத்திலும் இருப்பதால் இங்கு பயிலும் மாணவர் விபரங்கள் புரியாதிருப்பதாகவும், இந்தக் கொப்பிகளைக் கட்டாயப்படுத்தி மாணவிகளுக்கு விற்பனை செய்வதாகவும் பெற்றோர் புகார் கூறுகின்றனர்.

இந்தக் கொப்பிகள் நேற்று மாணவிகளுக்கு விநியோகிக்கப்பட்டபோது மாணவிகளிற் பலர் தமக்குச் சிங்களக் கொப்பிகள் தேவையில்லை என்று தெரிவித்தனர். எமக்கு ஏன் சிங்களத்தில் வாய்ப்பாடு, பெயர் வகுப்பு விபரங்கள் என்றும் கேட்டுள்ளனர்.

பெற்றோர்கள், கல்லூரி அதிபரிடம் இது விஷயமாக ஆட்சேபித்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

---

## சுப்ரீம் கோர்ட்டுக்கு பாரப்படுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், புதன்

மட்டுவிலைச் சேர்ந்த எஸ். மகாலிங்கம் என்னும் ஆசிரியரை துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ய எத்தனித்ததாக மட்டுவிலைச் சேர்ந்த எம். கணபதி, எஸ். இராமலிங்கம், கே. மாணிக்கம் ஆகிய மூவர் மீதும் சாவகச்சேரி பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் திரு. ஏ. வைத்திலிங்கம், விசாரணை முடிவில் எதிரிகளை சுப்ரீம் கோர்ட்டு விசாரணைக்கு நிற்குமாறு உத்தரவிட்டார்.

---

## கூட்டுறவுச் சங்கத்தில் துணிகள் களவு

அம்பலாங்கொடை, செவ்.

வெலுக்கொடை ஐக்கிய கூட்டுறவுச் சங்கத்தில் 10,000 ரூபா பெறுமதியான துணிகளும், 600 ரூபா பெறுமதியான 'டின்'னில் அடைக்கப்பட்ட உணவுப்பொருட்களும் களவுபோய்விட்டன.

கிந்தான, உடுவல, சீனிகம ஆகிய இடங்களிலுள்ள சங்கங்களிலும் திருடர்கள் தங்கள் கைவரிசையைக் காட்ட முயற்சி செய்து தோல்வியடைந்ததாகத் தெரியவருகிறது.

---

## கண்காணிப்புக் கமிஷன் தலைவர்

புதுடில்லி, ஜன. 21

மைசூர் ராஜ்ய முன்னாள் தலைமை நீதிபதி நிட்டூர் ஸ்ரீனிவாசராவ், மத்திய கண்காணிப்புக் கமிஷன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அரசாங்க ஊழியர்மீதுள்ள லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்து தண்டனை விதிப்பதற்கும் இந்தக் கமிஷனுக்கு அதிகாரம் இருக்கிறது.

---

## தங்கனிக்கா....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

போர்க்கப்பலும் நாசகாரிக்கப்பலும் தங்கனிக்கா கடற்கரைக்குச் சென்றுள்ளதாகவும் ஏடனிலிருந்து மற்றொரு கப்பல் அங்கு சென்று கொண்டிருப்பதாகவும் திரு. சாண்டிஸ் கூறினார். தங்கனிக்காவிலுள்ள பிரிட்டிஷ் பிரஜைகளுக்குப் பாதுகாப்பளிக்கப்படும். ஆனால் மற்றொரு நாட்டில் திடீரென நாம் நமது படைகளை இறக்குவது சரியல்ல என்று அவர் கூறினார். ஆனாலும் பிரிட்டிஷ் பிரஜைகளுக்குப் பாதுகாப்பளிப்பதுபற்றி அரசாங்கம் பரிசீலனை செய்துவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தங்கனிக்கா தலைநகரிலிருந்து பிரிட்டிஷ் பிரஜைகள் சிலர் மூன்று விமானங்களில் கென்யா தலைநகரான நைரோபிக்குபோய்ச் சேர்ந்துள்ளனர். நேற்றைய கலகத்தின்போது ஆசியாக்காரருக்கும் ஆபிரிக்கர்களுக்கும் சொந்தமான கடைகளும் தாக்கப்பட்டனவாம்.

### அதிக ஊதியமும் வேலை நிலைமையும்

அதிக ஊதியமும் மேலான வேலைநிலைமையும் கோரி இராணுவத்தின் சில அணிகள் இக்கலகத்தை ஆரம்பித்ததாயும் இராணுவத்திலுள்ள பிரிட்டிஷ் அதிகாரிகளை வேலையிலிருந்து நீக்க வேண்டுமென இவர்கள் கோரியதாகவும் தெரிகிறது. இராணுவத் தளபதியாக இப்பொழுது ஒரு ஆபிரிக்கர் நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

தங்கனிக்காவில் நேற்று நடைபெற்ற இராணுவக்கலகம் பற்றி கென்யா மந்திரிசபை நேற்று அவசரமாகக் கூடி ஆலோசனை செய்தது. இதுபற்றி ஆலோசிப்பதற்காக தங்கனிக்கா மந்திரிகள் இருவரும் ஸான்சிபார்மந்திரிகள் இருவரும் கென்யா தலைநகரான நைரோபிக்குச் சென்றுள்ளனர்.

---

## இ. போ. ச. தொழிலாளிக்கு 6 மாத கடுங்காவல்

கொழும்பு, செவ்

தங்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக தொழிற்சங்கள் வேலைநிறுத்தம் செய்ய உரிமையுண்டு ஆனால் வேலைநிறுத்தம் சட்டதிற்குட்பட்டு சமாதானமான முறையில் நடைபெறவேண்டும் என்று கொழும்பு தெற்கு மாஜிஸ்டிரேட் திரு. ஜே. ஜி எல். சுவாரிஸ், இலங்கை போக்குவரத்துசபை ஊழியர் ஒருவருக்கு 6 மாத கடூழிய சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கும்போது கூறினார்.

இவ்வழக்கில் ஜே. கே. ஹென்றிக் என்னும், இ. போ. ச. தொழிலாளி, சக தொழிலாளிகளான கே. முடியான்சி, ஜே. ஏ. எட்வின் ஆகியோர்களை தாக்கியதாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

சம்பவம் நடந்த தினம் அங்கு வேலைநிறுத்தம் நடைபெற்றதாகவும் வேலைநிறுத்தம் செய்த எதிரி, வேலைக்கு சென்ற மற்ற இருவரையும் தாக்கியதாகவும் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

---

## மருந்து வாங்க சென்றவர் மரணம்

யாழ்ப்பாணம், புதன்

சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு மருந்து வாங்க சென்ற சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த கே. வி. வேலுப்பிள்ளை என்பவர் வழியில் விழுந்து மரணமானார்.

மரணவிசாரணை நடத்திய திரு. எஸ். கே. திரவியநாயகம் இயற்கை மரணமெனத் தீர்ப்பளித்தார்.

---

## மயானத்தை சுத்தம் செய்தனர்

டெடிகம, செவ்.

வீவெல்தேனியா கிராமமுன்னேற்றச் சங்கத்தைச் சேர்ந்த 40 அங்கத்தவர்கள் சிரமதான இயக்கத்தின் மூலம் மயான நிலத்தைச் சுத்தம் செய்தனர்.

## பண விஷயத்தில் ஊழல்

யாழ்ப்பாணம், புதன்

சாவகச்சேரி நகரசபையின் புதிய தலைவர் திரு. ஆர் டி. சிவகுரு பொறுப்பேற்க காரியாலயத்திற்கு சென்றபொழுது பண விஷயங்களில் பல ஊழல்கள் இருப்பதை அறிந்து கணக்கு பரிசோதகருக்கு ஒரு அவசரக் கடிதம் அனுப்பியுள்ளதாக தெரியவருகிறது.

பண விஷயத்தில் பல ஊழல்கள் இருப்பதால் கணக்கை பார்வையிட்டபின் தன்னிடம் ஒப்படைக்குமாறு அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## வகுப்புக்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நந்தா தெரிவித்திருந்தார். இந்தயோசனைக்குபாகிஸ்தான் இணக்கம் தெரிவித்தால் குறுகிய கால அறிவித்தலில் தாம் டாக்காவுக்குச் செல்லத் தயாராக இருப்பதாகவும் திரு. நந்தா அறிவித்தார்.

இந்திய, பாகிஸ்தான் மந்திரிகள் டாக்காவிலும், கல்கத்தாவிலும் சந்தித்து ஆலோசனை நடத்தலாமென இந்தியா யோசனை தெரிவித்திருந்ததாகவும் அவர் சொன்னார்.

### புனித சின்னம்

காஷ்மீரில் காணமல் போய் பின்னர் மீட்கப்பட்டது சம்பந்தமாக நடைபெற்ற விசாரணையின் முழு விபரமும் இன்னும் இரண்டு வாரங்களில் வெளியிடப்படுமென்றும் காஷ்மீர் கதிரிரியாஸத்கான் சிங், பிரதமர் சம்சுதீன், பக்ஷிகுலாம் முகம்மது ஆகியோருடன் தாம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் அவர் கூறினார்.

### நேருவுக்கு தெரியும்

பாரதப் பிரதமர் நேருவைத் தாம் நேற்றுச் சந்தித்ததாகவும் அவர் உற்சாகமாக இருப்பதாகவும் நந்தா தெரிவித்தார். நாட்டில் நடைபெறும் சம்பவங்களின் முழு விபரமும் அவருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.






# "எனது மகன் சுட்டுக் கொல்லப்பட்டார்"

## ராணி மாளிகையில் இறந்து கிடந்த ராணுவ வீரனின் தந்தை கூறுகிறார்

கொழும்பு, செவ்.

தமது மகன் கொலை செய்யப்பட்டாரென்றும் இது குறித்து தமக்கு எதுவித சந்தேகமுமில்லை யென்றும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் ராணி மாளிகை வாசலுக்கருகில் சென்ற வருடம் டிசம்பர் 17-ம் திகதி இறந்து கிடந்த சிங்க அணியைச் சேர்ந்த மைத்திரிபாலா என்பவரது தந்தை பொலிஸ் இன்ஸ்பெக்டர்ஜெனரலுக்கும் கவர்னர் ஜெனரலுக்கும் அனுப்பியுள்ள பெட்டிஷனில் தெரிவித்துள்ளார்.

தெமட்டகொடையைச் சேர்ந்த மைத்திரிபாலாவின் தந்தை எம். டி. அலெக்சாந்தர் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு அனுப்பியுள்ள பெட்டிஷனில் சுட்டிக் காட்டியுள்ளதாவது (இதன் பிரதி கவர்னர் ஜெனரலுக்கும் அனுப்பப்பட்டது)

இராணுவ உத்தியோகத்தர் ஒருவருககும் சதி வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள எதிரி ஒருவருக்குமிடையில் இடம் பெற்ற ஒரு சம்பவம் குறித்து தாம் வெளியிட்ட தகவல் சம்பந்தமாக குறிப்பிட்ட இராணுவ உத்தியோகத்தரால் தாம் அச்சுறுத்தப்பட்டதாக மைத்திரிபாலா தமது தாய்க்குத் தெரிவித்திருந்தார்.

இவ்வித தகவல் தெரிவித்த முதலாவது ஆள் தான் என்றும் இராணுவத் தளபதிக்குத் தாம் முழுத்தகவல்களையும் தெரிவித்ததாகவும் அவர் தாய்க்குக் கூறியிருந்தார்.

இவ்வித தகவல்களைத் தெரிவிப்பதில் கண்டிப்பாக இருந்தால் எல்லோரும் ஆபத்தில் சிக்க வேண்டிவரும் என இராணுவ உத்தியோகத்தர் மைத்திரிபாலாவுக்கு எச்சரிக்கை செய்து அவருடன் கடுமையாக நடந்து கொண்டார்.

தாம் தொடர்ந்து கடமை புரிவதில் அச்சம் கொண்டுள்ளதாகவும் மைத்திரிபாலா தாயிடம் கூறியிருந்தார்.'

மைத்திரிபாலாவின் மரணம் சம்பந்தமாக நடைபெற்ற மரண விசாரணையில் அவர் தற்கொலை செய்து கொண்டார் எனத் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது.

எம். டி. அலெக்சாந்தரின் பெட்டிஷன் சம்பந்தமாக விசாரணை நடத்துமாறு இன்ஸ்பெக்டர் ஜெனரல் உத்தரவிட்டுள்ளார்.

---

## டச்சுக் காலத்து கட்டடங்களில் சுங்கக் காரியாலயங்கள்

கொழும்பு, செவ்வாய்

சுங்கப் பகுதியில் வேலை நிலைமை நிதிமந்திரியை அதிர்ச்சிக்குள்ளாக்கி இருப்பதாக அறியப்படுகிறது.

நிதிமந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன சுங்க இலாகாக் காரியாலயங்களைச் சென்ற சனிக்கிழமை சென்று பார்வையிட்டபோதே அவர் அதிர்ச்சிக்குள்ளானர்.

சுங்க இலாகா உத்தியோகஸ்தர்கள் வேலைசெய்யும் காரியாலயங்களில் பல டச்சுக்காரர்களால் அவர்களது ஆட்சிக்காலத்தின்போது கட்டப்பட்டவை என்றும் இவை 250 வருடங்களுக்கு முந்தியவை யென்றும் மந்திரியின் கவனத்துக்குக் கொண்டுவரப்படது.

இவ்வித நிலைமையிலுள்ள கட்டடங்களில் வேலைபார்ப்பது மிக்க ஆபத்தானதெனவும் அவருக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

இதுசம்பந்தமாகத் தாம் உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்போவதாக மந்திரி உறுதியளித்துள்ளார். மந்திரியின் திட்டப்படி இக்கட்டிடங்கள் உடைக்கப்பட்டு புதிய கட்டிடங்கள் கட்டப்படவிருக்கின்றன.

---

## பிரிட்டன் ஆட்சேபம்

லண்டன், ஜன. 21

ஜாகர்த்தாவிலுள்ள பிரிட்டனுக்குச் சொந்தமான 'யுனிலிவர்' கூட்டுஸ்தாபனம் என்னும் வர்த்தக ஸ்தாபனத்தின் காரியாலயத்தை ஜாகர்த்தா தொழிற்சங்கத்தினர் கைப்பற்றியிருப்பதற்கு இந்தோனேஷியாவிடம் பிரிட்டன் ஆட்சேபம் தெரிவித்துள்ளது. லண்டனிலுள்ள இந்தோனேஷியத் தூதுவரை பிரிட்டிஷ் வெளிவிவகார இலாகா அழைத்து ஆட்சேபனையைத் தெரிவித்ததுடன், பிரிட்டிஷ் நிறுவனங்களை அரசாங்கம் எடுத்துக்கொள்ளாது என்று இந்தோனேஷியா கொடுத்த வாக்குறுதியையும் நினைவூட்டியது.

---

## இடமில்லாததால் வகுப்பில்லை

ரக்வான, செவ்வாய்

இடவசதியில்லாத காரணத்தால், ரக்வான அரசாங்க மகாவித்தியாலயத்தில் இவ்வருடம் எச். எஸ். ஸி. ஆரம்ப வகுப்பு நடைபெறவில்லை.

பாடசாலையிலுள்ள கட்டிடமொன்று பாவிக்க முடியாத வகையில் பழுதடைந்திருப்பதாலேயே இந்த நிலைமை ஏற்பட்டது. இதன் காரணமாக, எச். எஸ். ஸி. வகுப்பு மாணவர்களை பாடசாலைக்கு வர வேண்டாமென்று அதிபர் தெரிவித்துள்ளார்.

---

## வானொலிநிகழ்ச்சிகள்

### புதன் 22-1-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-50 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 சேர்ந்திசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை, 6-15 பாங்கு.

இரவு 6-30 கிராமசஞ்சிகை, 6-45 நேயர்விருப்பம, 7-15 பேச்சு — 'சித்தவைத்திய முறையின் முக்கியத்துவம், 7-30 வயலின் — ருத்ராணி நல்லநாதன், 8-00 இஸ்லாமியநிகழ்ச்சி, 9-15 பாட்டு — டி. ராஜலிங்கம், 10-15 சேர்ந்த இசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15 பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-30 மணித்திருநாடு, 7-45 இடைவேளை.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-30 வாத்தியஇசை ஏ. கே. வி. நடராஜன் — கிளாரினெட், 1-50 மெல்லிசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு, 2-40 ஜயபேரிகை — வாத்தியஇசை.

மாலை 5-15 என். பாலன் — வயலின், 5-45 ஆகாஷ்வாணி ஒலிப்பதிவுகள்.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-45 என்ன வாடகை — சத்திரம், 8-00 திரைப்பட இசை, 8-30 டெல்லி அஞ்சல், 8-45 குரல்இசை, 8-55 டெல்லி அஞ்சல், 9-15 இம்மாதப் பாடல், 9-20 பொன்ஒளிர் பாரதம் — இசைநிகழ்ச்சி, 9-30 டெல்லி அஞ்சல், 9-50 இசைமாலை, 10-00 என். பாலன் — வீணை.

---

# "சிங்களத்தில் தேர்ச்சி பெறாதவருக்கு உதவுக"

## தேர்ச்சி அடைந்தவருக்கு திறைசேரி அறிவிப்பு

கொழும்பு, செவ்.

சிங்களத்தில் தேர்ச்சி பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் சிங்களத்தில் தேர்ச்சி பெறாத உத்தியோகத்தர்களுக்கு சிங்கள மொழி பெயர்ப்பு விஷயங்களில் அவசியம் நேர்ந்தால் உதவ வேண்டுமென திறைசேரி அறிவித்துள்ளது.

தனிச் சிங்களச் சட்டத்தை அமுல் நடத்துவதில் எந்தவித தடையுமில்லாது பார்த்துக் கொள்ளவே இவ்வித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனுல் 1956-ம் வருடத்துக்கு முன் அரசாங்க சேவையில் சேர்ந்தவர்கள் சிங்களத்தில் தேர்ச்சிபெற போதிய அவகாசம் இருக்குமென்றும் கருதப்படுகிறது.

இவ்வித மொழி பெயர்ப்புக்களை அவசியம் நேர்ந்தால் வழக்கமான காரியாலய நேரத்துக்கு முன்னரோ அல்லது பின்போ செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான மேலதிக நேர சம்பளபபடி வழங்கவும் திறைசேரி அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சிங்களத்தில் தேர்ச்சி பெறாத ஒரு உத்தியோகத்தர் தாம சிங்களத்தில் தகுதி பெறாத காரணத்தினுல் தமக்கென ஒதுக்கப்பட்ட வேலையைக் காரியாலய நேரத்திற்கு முன்னரோ பின்போ இருந்து வேலை செய்ய வேண்டியிருந்தால் அதற்கு இவ்வித சம்பளப்படி வழங்கப்பட மாட்டாது.

ஒவ்வொரு அமைச்சின் கீழ் அல்லது இலாகாவின் கீழ் மேலதிக சம்பளப்படிக்கென ஒதுக்கப்பட்டுள்ள மான்யத்திலிருந்து இந்த மேலதிக சம்பளபபடி வழங்கப்பட வேண்டுமென திறைசேரி காரியதரிசி தெரிவித்துள்ளார்.

---

## 'விரைவில் மருந்துகளை அனுப்புக'

கொழும்பு, செவ்வாய்

மாகாணங்களிலுள்ள அநேக மெடிக்கல் ஸ்ரோர்களும், சுகாதார நிலையங்களும் நோயாளிகள் தினமும் வாங்கும் மருந்துகள் சிலவற்றை உடனடியாக அனுப்பிவைக்கும்படி மருந்து ஏஜண்டுகளுக்கும், சிவில் மெடிக்கல் நிலையத்திற்கும் அவசர தந்தி அனுப்பி இருக்கின்றன.

இந்நிலைமை பற்றி சுகாதார அமைச்சுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. இம்மருந்துக்களை இன்னும் ஒரு மாதகாலத்திற்கு அனுப்ப முடியாத நிலையிலிருப்பதாக ஏஜண்டுகள் அறிவித்துள்ளார்கள்.

---

## பார்லிமெண்ட் கணக்குகள் விரைவில் ஆராயப்படும்

கொழும்பு, செவ்வாய்

பாராளுமன்றம் சம்பந்தப்பட்ட கணக்குகள் பற்றி ஆராயும் பொருட்டு எல்லாக் கட்சித் தலைவர்களும் வியாழக்கிழமை கூடி விவாதிப்பார்கள்.

பாராளுமன்றத்தின் தேசீர் இடைவேளையின்போது இக் கூட்டத்தை நடத்த முடிவு செய்திருப்பதாகவும், அரசாங்கம் உடனடியாக கவனம் செலுத்தவேண்டிய 12 'பில்'கள் இருப்பதாகவும் இதற்கு எதிர்க்கட்சியின் ஒத்துழைப்பு அவசியமென்றும் திரு. சி. பி. டி' சில்வா கூறினர்.

---

## வரியிறுப்போர் சங்க சமாசக் கூட்டம்

யாழ்ப்பாணம், செவ்.

சாவகச்சேரி வரியிறுப்போர் சங்கச் சமாசத்தின் 14-வது வருடாந்தக் கூட்டம் திரு. கே. இளையதம்பி தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு கே. விஸ்வலிங்கம், உப-தலைவர் திரு. ஏ. சுப்பிரமணியம், காரியதரிசி: திரு. எம். வேலாயுதம், உப-காரியதரிசி: திரு. ஐ. நடராசா, தனதிகாரி: திரு. எஸ். சுந்தரம். பத்துப்பேர் கொண்ட ஆலோசனைச் சபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

---

## குதிரைப்பந்தய தடை இருக்கும்

கொழும்பு, செவ்.

குதிரைப் பந்தயத்தை தடைசெய்யவேண்டும் என்ற தீர்மானத்தை அரசாங்கம் மாற்றுதென்றும் ஏற்கனவே தீர்மானித்துள்ளபடி தடைசெய்யுமென்றும தெரியவருகிறது.

குதிரைப் பந்தயத்தை தடைசெய்யும் தீர்மானததை யிட்டு திரும்பவும் ஆலோசிக்கும்படி, சில அரசாங்ககட்சி எம். பி. க்கள் கோரியிருந்தார்கள். அரசாங்கம் ஸ்தல ஸ்தாபன அமைச்சுக்கு, அனுப்பியுள்ள கடிதத்தில் ஏற்கனவே அரசாங்கம் செய்த முடிவை மாற்ற இயலாதெனத் தெரிவித்துள்ளது.

---

## போட்டியின்றி தெரிவு

நிவித்திகலை, செவ்.

பெல்மதுளை பட்டினசபைத் தலைவராக சிறிலங்காசுதந்திரக்கட்சியைச் சேர்ந்த திரு. ஏ. சி. எம். மரிக்கார் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார்.

சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த திரு. என். ஏ. முதலிகாமி மறுமுறையும் உபதலைவராக போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

---

## இடதுசாரி தலைவர்

கொழும்பு, செவ்.

கஹவத்தை பட்டினசபைக்கு ஐக்கிய இடதுசாரி முன்னணியைச் சேர்ந்தவரும், முன்னுள் அற்றகலன்பன்ன கிராம சபைத் தலைவருமான திரு. எஸ. பி. மார்டின் சிங்கோ தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

யூ. என். பி. கட்சியைச் சோந்த திரு. டபிள்யு. டீ. ஜி. மகதந்திலா தெரிவு செய்யப்பட்டார்.

---

## கதிரையில் பிரசவம்

இரத்தினபுரி, செவ்வாய்

மரப்பானவைச் சேர்ந்த 18 வயதுடைய இளம் பெண் கதிரையில் இருந்தபடியே சிசு ஒன்றைப் பிரசவித்தார். சிசு பிறந்த உடனேயே மரணமானது.

இந்த இளம் பெண் தனது தாயுடன் ஆஸ்பத்திரிக்குச் சென்று திரும்பியபோது பிரசவ வேதனை உண்டாகியதால் கதிரையில் வைத்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரவேண்டி நேரிட்டது. ஆஸ்பத்திரி பிரசவ வார்டுக்குள் கொண்டு செல்லுமுன்னர் குழந்தை பிறந்தது.

---

## படைகுறைப்பு மகாநாடு

ஜெனிவா, ஜன. 21

பதினேழு நாடுகளின் படைகுறைப்பு மகாநாடு ஐந்து மாதகால இடைவெளிகுப் பின் இன்று மீண்டும் ஆரம்பமாகிறது. இந்த மகாநாட்டில் படைகுறைப்புக்கான பல புதிய யோசனைகள் வெளியிடப்படலாமென எதிர் பார்க்கப்படுகிறது.

---


## கேள்வி விளம்பரம்

கீழ்க்கண்ட உலொறி ஏற்றுமதிகளுக்கு, 1964-ம் ஆண்டு மாசிமாதம் 10-ம் திகதி நண்பகல் 12 மணிவரை அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் எங்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விகள், கீழ்க்கண்ட முழுதுவகற்கும் அல்லது அவற்றில் ஒன்றுக்கு அல்லது பலவற்றிற்குமாக இருக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் 8-2-64 நண்பகல் 12மணிவரை பத்திரத்திற்கு ரூபா 1-00 வீதமும், ஒரு கேள்விக்கு வைப்புப் பணமாக ரூ. 100-00 வீதமும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம.

கேள்வி வைப்புப்பணம், வெற்றிபெற்ற மனுதார் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட பின்பு, திருப்பி ஒப்படைக்கப்படும்.

**ஏற்றுமதி வேலைகள் விபரம்**

1. கொழும்பு மணிமார்க்கட்டிலிருந்தும் மற்றும் அரசாங்க கூ.மொ. வி. ஸ்தாபன களஞ்சியங்களிலிருந்தும் உலொறிகள் மூலம் யாழ்ப்பாணம் ப. நோ. கூ. ச. சமாச களஞ்சியங்களுக்கு சீனி ஏற்றுமதி செய்தல்.
2. (அ) காங்கேசன் துறை சீமேந்துத் தொழிற்சாலையிலிருந்து உலொறிகள் மூலம் யாழ்ப்பாணம் ப. நோ. கூ. ச. சமாச களஞ்சியங்களுக்கு சீமேந்து ஏற்றுமதி செய்தல்.
   (ஆ) காங்கேசன் துறை சீமேந்துத் தொழிற்சாலையிலிருந்து உலொறிகள் மூலம் யாழ்ப்பாணப் பட்டண திறைபெரும்பாகப் பகுதியிலுள்ள சமாச கிளை ஸ்தாபனங்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் சீமேந்து ஏற்றுமதி செய்தல்
3. காவற்குழி அரசினர் உணவு விநியோக நிலையத்திலிருந்து யாழ்ப்பாணம் ப. நோ. கூ. ச. சமாசக் களஞ்சியங்களுக்கு அரிசி, மாவு எற்றுமதி செய்தல்.

மேலும் விபரங்கள் கீழ்க் கையொப்பமிட்டவரிட மிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். ரெத்தி செல்லப்பா,
மனேஜர்-அக்கவுண்டன்ற்.

யாழ்ப்பாணம் ப. நோ.
கூ. ச. சமாஜம்(வரையுள்ளது)
74/3, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம். 1767

---

## தேவை

சோப்பாய் மத்திய பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பண்டகசாலைக்கு ஒரு மனேச்சர்தேவை. மனுக்கள் 8-2-64க்கு முன் காரியதரிசிக்கு தபால் மூலம் அனுப்பவேண்டும்.

தராதரம்: G. C. E. ல் 4 பாடங்களில் சித்தியடைந்திருக்கவேண்டும். (தமிழ், கணிதம் உட்பட)

வயது: 31-1-64-ல் 20 வயதிற்கு மேல.

சம்பளம்:- மாதம் ஒன்றிற்கு 125-00.

பிணை:-ரொக்கம் ரூ. 1000/-
காணி ரூ. 3000/-.

க. தெ. குமாரசுவாமி,
1766 கௌரவ காரியதரிசி.

---

## வரி விளம்பரம்

### தேவை

உள்நாட்டுத் தயாரிப்புகளை விற்பனை செய்யவும் பிரசாரம் செய்யவும் ஆர்வமுள்ள வாலிபர்கள் மனுச்செய்க. அ. த. பாலசுப்பிரமணியம், அளவெட்டி. 1876

# ஐ. ஜி. பி. க்கு எஸ். ஜே. வி. கடிதம்
# தமிழில் கையெழுத்து வைத்த குமாஸ்தாமீது தண்ணீர் ஊற்றினர்?

கொழும்பு, திங்கள்

நாரம்பிட்டியாவில் இனக்கலவரத்துக்கான அறிகுறிகள்தென்படுகின்றன என்றும் நிலைமையைக்கட்டுப்படுத்த உடனடிநடவடிக்கைஎடுக்கவேண்டுமென்றும் தமிழரசுத்தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு அனுப்பியுள்ள அவசரக் கடிதமூலம் கேட்டுள்ளார்.

நாரம்பிட்டியாவில் உள்ள சர்வேஜெனரல் காரியாலயத்தில் கடமையாற்றும் தமிழ் குமாஸ்தா ஒருவர் தினவரவு இடாப்பில் தமிழில் கையொப்பமிட்டதைத் தொடர்ந்தே இங்கு நெருக்கடியான நிலை உருவாகுவதற்கான காரணங்கள் ஏற்பட்டது. இதுபற்றி திரு. எஸ். ஜே. வி விளக்கி, இது தனிப்பட்டவரின் விஷயமல்லவென்றும் தக்க பாதுகாப்பு அளிக்கப்படவேண்டுமென்றும் தெரிவித்துள்ளார்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

"மேற்படி காரியாலயத்தில் சேவைசெய்யும் குமாஸ்தாவான திரு. செல்லப்பா என்பவர் இந்த வருடம் ஜனவரி முதல் திகதியிலிருந்து தினவரவு இடாப்பில் தமிழில் கையொப்பமிட்டு வந்தார். ஆங்கில மொழியில் நடத்தப்பட்ட பரீட்சை மூலமாக அரசாங்க சேவையில் சேர்ந்த இவர் தாம் தமிழில் கையொப்பமிட போவது பற்றி சர்வே ஜெனரலுக்கு விளக்கம் தெரிவிக்கும் கடிதமொன்றை பிரதான கணக்காளரின் சிங்கள குமஸ்தாவிடம் கொடுத்திருந்தார்.

இந்த கடிதத்தைக் கொடுக்க பிரதான கணக்காளரின் குமஸ்தா மறுத்து, செல்லப்பாவிடம் திருப்பிக் கொடுத்தார். இதன் பின்னர் செல்லப்பா கந்தோர் கன்டீனுக்குச் சென்றபோது சிலர் அவர் மீது தண்ணீர் ஊற்றினர். கன்டீனிலிருந்து திரும்பியபோது சில குமாஸ்தாக்களும் தொழிலாளர்களும் காரியாலய வாசலில் சூழ்ந்து அவருக்குத் தொந்தரவு கொடுக்க முயற்சித்தார்கள். இதை அறிந்த கணக்காளர் செல்லப்பா காரியாலயத்தில் இருந்தால் ஏதும் குழப்பம் நேர்ந்து விடும் என்று கூறி வீட்டுக்குப் போகும்படி தெரிவித்தார்.

செல்லப்பா காரியாலயத்தை விட்டு வீட்டுக்குச் சென்ற சமயம் வழியில் சில காரியாலயத் தொழிலாளர்கள் 'இவர்தான் தமிழில் வேலை செய்தவர்' என கையாண்டி செய்தனர். நிலைமை மோசமாகிவிடுமோ என அஞ்சிய செல்லப்பா டாக்சியில் வெள்ளவத்தையிலிருக்கும் தமது வீடு சென்னூர்.

திரு.செல்லப்பா இச்சம்பவம் குறித்து எழுது வினைஞர் சங்கத்துக்கு தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து சங்கத் தலைவர் திரு. கோடீஸ்வரனும் செயலாளர் திரு. பாலசிங்கமும் இது விஷயத்தில் தலையிட்டனர்.

திரு. செல்லப்பா இப்போது திரும்பவும் காரியாலயத்துக்கு சென்று வருகிறாரென்றும் தமது கையொப்பத்தைத் தமிழிலேயே வைக்கிறாரென்றும் அறியப்படுகிறது.

திரு. எஸ். ஜே. வி., ஐ. ஜி பி.க்கு அனுப்பியுள்ள கடிதத்தின் பிரதிகளை சபை முதல்வர் திரு. சி. பி. டி. சில்வாவுக்கும் சர்வே ஜெனரலுக்கும் அனுப்பியுள்ளார்.

கொழும்பு

## தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் வேலைநிறுத்தம்
### இதரபகுதிகளுக்கும் பரவலாம்

கொழும்பு, திங்கள்

கொழும்பு தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் இன்று வேலைநிறுத்தம் செய்தனர். சுயபாஷை போதனை இனங்களுக்கு நடத்தப்படும் பரீட்சைகளில் உள்ள குறைபாடுகளை ஆட்சேபித்தும் அரசாங்க இலாகாக்களில் வேலைவாய்ப்பளிக்கும்பொருட்டு தொழில் நுட்பக்கல்லூரி சராசரபத்திரங்களுக்குரிய சலுகையை அதிகாரிகள் அளிக்காபலிருப்பதை ஆட்சேபித்துமே வேலைநிறுத்தம் நடைபெற்றது.

இன்று மாலை தொழில்நுட்பக் கல்லூரிக்கு அருகே தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் கழகத்தினர் கூட்டம் நடாத்தினர். கல்வி மந்திரியோ அல்லது கல்வி இலாகா உயர்தர அதிகாரி ஒருவரோ இதில் தலையிட்டுப் பிரச்னைகளைத் தீர்த்துவைக்கும்வரை விரிவுரைகளுக்குப் போவதில்லை என கூட்டத்தில் பேசிய கழகத் தலைவர் திரு. ஆனந்தா அபயவர்த்தன தெரிவித்தார். யாழ்ப்பாணம், காலி, கண்டி, பதுளை ஆகிய தொழில்நுட்ப கல்லூரிகளில் உள்ள கிளைச் சங்கங்களையும் வேலைநிறுத்தம் செய்யுமாறு அழைப்பதெனவும் தெரிவித்தார்.


## இப்பொழுது திரையிடப்படுகிறது!

சிங்ஸி (கொழும்பு) — சினாலி! (வெள்ளவத்தை) — நவா (கொம்பனித்தெரு)

கல்யாணி (காவலப்பிட்டியா) — ஸ்ரீகிருஷ்ணா (திருமலை) — மொடேர்ன் (பதுளை) — விஜிதா (ஹட்டன்)

விஜயா (மட்டக்களப்பு) — ஜெமினி (குருநகல்)

வியப்பு, திகைப்பு, விறுவிறுப்பு, வெள்ளமெனத் துள்ளிவரும் இசையமைப்பு!

உங்களை மகிழ்விக்கும் அற்புதப் படைப்பு!

உணர்ச்சிக் கோர்வையிலே உருவான உன்னத குடும்பச் சித்திரம்!!



எம். ஜி. ராமச்சந்திரன் - பி. சரோஜா தேவி

எஸ். வி. சுப்பையா - எம். என். நம்பியார்

எம் வி. ராஜம்மா - நாகேஷ் - அசோகன்

மற்றும் பலர் திறம்பட நடித்த

சரவணா பிலிம்ஸ்

# பணத் தோட்டம்

தயாரிப்பு: ஜி. என். வேலுமணி — டைரக்ஷன்: கே. சங்கர்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

ராஜ்கபூர் — பத்மினி நடித்த

ஜிஸ் தேஷ் மென் கங்கா பேதி ஹா

மனோகரா (யாழ்ப்பாணம்)

சிவாஜி கணேசன்— சரோஜாதேவி நடித்த

பாகப்பிரிவினை


சதிவழக்கு

## 'ஜனவரி 26-ம்திகதிக்கு முன்பே சதிபற்றி பிரதமருக்கு தெரியும்'
### மேஜர் ராஜபக்ஷ சாட்சியம்

கொழும்பு, திங்கள்

"1962-ம் ஆண்டு ஜனவரி 26-ம் திகதிக்கு முன்னரே சதிபற்றிப் பிரதமருக்குத் தெரியும். சதிபற்றி கேர்ணல் உடுகம பிரதமருக்குத் தெரிவித்திருந்ததாக கேர்ணல் அட்டியகலை என்னிடம் தெரிவித்தார்." என்று இன்று மீண்டும் சதி வழக்கு விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதியரசர்கள் எச். என். ஜி. பெர்ணாண்டோ, எல். பி. டி' சில்வா ஆகியோரின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் மேயர் ராஜபக்ச தெரிவித்தார்.

திரு ராஜபக்ச வாக்குமூலம் கொடுத்தது சம்பந்தமான சில விஷயங்களை தெளிவாக்குவதற்காக அவரின் வாக்குமூலத்தை பதிவு செய்த முன்னாள் ஏ. எஸ். பி. (சி. ஐ. டி) திரு. அம்பலவாணர் அழைக்கப்பட்டார். தானே திரு. ராஜபக்சாவின் வாக்குமூலத்தை பதிவு செய்ததாக நீதியரசர் சன்சோனியிடம் திரு. அம்பலவாணர் தெரிவித்தார். தன்னைப் பொறுத்தமட்டில் கேர்ணல் சேரம புரட்சி சதிக்கு உடந்தையாகவோ அல்லது ஆதரவாகவோ இருந்ததாக நேரடியான சாட்சி எதுவும் இல்லையென்றும் அந்த நேரத்தில் திரு. சேரத்தைப்பற்றி திருவாளர்கள் வைட், லோயலா, யோசப் ஆகியோர் கதைத்ததிலிருந்தே சேரமும் இதில் ஈடுபட்டிருக்கிறாரோ எனத் தான் சந்தேகித்ததாகவும் திரு. அம்பலவாணர் தெரிவித்தார்.

மேயர் ராஜபக்சாவை எதிரிகள் தரப்பு சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் குறுக்குவிசாரணை செய்தார். மேஜர்கள் வைட், யோசப், லோயலா, கேர்ணல் சேரம் ஆகியோர் புரட்சி சதி செய்ய எத்தனித்தார்கள் என்றோ அல்லது சதிக்கு ஆதரமாக இருந்தார்கள் என்றோ தான் அலரி மாளிகையில் அளித்த சாட்சியத்தில் கூறவில்லையென திரு. ராஜபக்ச தெரிவித்தார். தான் களைத்திருந்ததால் வாக்குமூலத்தை வாசிக்காமலே கையெழுத்திட்டதாகவும் திரு. அம்பலவாணர் வாக்குமூலத்தை பதிவு செய்துவிட்டு பக்கத்துக்கு பக்கம் வாசித்துக் காட்டினாரா என்பது பற்றித் தனக்கு ஞாபகமில்லை எனவும் தெரிவித்தார்.

ஜி. ஜி:- கேர்ணல் சேரம் சதியில சம்பந்தப் பட்டிருக்கலாம் என நீர் சந்தேகிக்கவில்லை?

சாட்சி:- ஆம்.

திரு. ராஜபக்சா கூறியதாக பதியப்பட்டிருக்கும் வாக்குமூலத்தின் சந்தேகத்துக்குரிய பகுதி பின் வருமாறு:-

"என்னால் பெறக்கூடிய தகவல்களைப் பெற முயன்றேன். மேஜர் லோயலா மேஜர் வைட், கேர்ணல் சேரம் ஆகியோர் ஒரு சதியை நடத்த முயற்சித்தார்கள் என்பதை அவரிடமிருந்து அறியக்கூடியதாக விருந்தது".

## திரு. பொ. நாகலிங்கம்
### சுன்னாகம் பட்டினசபைத் தலைவர்
### உபதலைவர் டாக்டர் நடராசா

யாழ்ப்பாணம், செவ்வாய்

சுன்னாகம் பட்டினசபையின் தலைவராக முன்னாள் செனட்டர் திரு. பொ. நாகலிங்கம் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். உப தலைவராக டாக்டர் ஆ. நடராசா போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டார்.

பட்டினசபையின் 6-ம் வட்டார அங்கத்தவரும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவருமான திரு. கே. நல்லநாயகம் இடதுசாரியான திரு பொ. நாகலிங்கத்தின் பெயரைப் பிரேரிக்க, இரண்டாம் வட்டார அங்கத்தவரும் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவருமான திரு எஸ் பொன்னுத்துரை ஆமோதிக்க திரு. நாகலிங்கம் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். தலைவர் தெரிவு ஸ்தல ஸ்தாபன வடபகுதி உதவி ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகரின் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் தெரிவின் முடிவில் ஸ்தல ஸ்தாபன உதவி ஆணையாளர் திரு. மாணிக்கவாசகர், திரு. நாகலிங்கம் ஒரு மகத்தான பொறுப்பை ஏற்பதாகவும் சுன்னாகம் பட்டினசபை ஒரு சிறந்த பணவருவாயுள்ள ஸ்தல ஸ்தாபனமாக அமைவதால் அப்பகுதியை அகில இலங்கைக்கும் ஒரு முன்மாதிரியான பட்டணமாக்கத் தலைவரும் அங்கத்தவரும் முயல்வார்களெனத் தாம் எதிர்பார்ப்பதாகக் கூறினார்.

ஏகமனதாகத் தாம் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டமைக்கு அங்கத்தவர்களுக்கு நன்றி தெரிவித்துப் பேசிய திரு. நாகலிங்கம் அதே கூட்டுறவுடன் மக்களுக்குப் பட்டினசபைமூலம் பல வசதிகளை ஏற்படுத்திச் சிறந்த சேவை செய்வதாக ஸ்தல ஸ்தாபன ஆணையாளருக்கும் வாக்குறுதி கொடுத்தார்.

உடுவில் எம். பி.யும் ஐந்தாம் வட்டார அங்கத்தவருமான திரு. வி. தர்மலிங்கம் பேசியதாவது:

"சுன்னாகப் பகுதியில் தேர்தல்காலங்களில் மக்கள் தங்கள் பிரதிநிதிகளை பல போட்டிகள் மத்தியிலும் சில சமயங்களில் உணர்ச்சிவசப்பட்ட கைகலப்புகளுக்குள்ளும் தேர்ந்து எடுத்துள்ளார்கள். ஆனல் பாரம்பரியமாக அவர்களுடன் இருந்துவந்த ஒரு சிறந்த அம்சம் தேர்தல் முடிவில் போட்டி மனப்பான்மை, குரோதமனப்பான்மை அற்று மிக ஒற்றுமையாக நாட்டின் சேவையில் ஈடுபட்டிக்கொண்டே வந்திருக்கிறார்கள். ஆகவேதான் பல அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் ஏகமனதாகத் திரு. நாகலிங்கத்தைத் தலைவராகத் தெரிவுசெய்துள்ளோம். இது ஏனைய ஸ்தல ஸ்தாபன சபைகளுக்கும் ஓர் எடுத்துக்காட்டாக அமையும் என நம்புகிறேன்".

டக்டர் ஆ. நடராசா பேசும்பொழுது, தெரிவுசெய்யப்பட்ட கிராமசபை அங்கத்தவர்கள் சுன்னாகத்தைப் பட்டினசபையாக்குவதில் பலவித முயற்சிஎடுத்தும் பல தடைகள் ஏற்பட்டிருந்தும் அரசாங்கம் தாமாகவே பட்டினசபை அந்தஸ்தை இந்தநேரம் கொடுத்துதவியது சுன்னாகம் மக்களின் அதிர்ஷ்டமாகும் என்றும் சகல சமூகங்களையும் சேர்ந்த அங்கத்தவர்கள் சபைக்குத் தெரிவுசெய்யப்பட்டது சபையின் நிறைவுத் தன்மையைக் காட்டுவதாகுமெனவும் குறிப்பிட்டார்.

திரு. எஸ். ஆர். யேக்கப் பேசும்பொழுது திரு. நாகலிங்கத்தின் அரசியல் சேவையின் பூரணத்துவத்தை அடிகோலும் வண்ணமும் சென்ற 25 வருடகாலச் சேவையின் அங்கீகாரமாகவும் அவர் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார் என்றார்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.